**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, KRISHNAGIRI**

**OS.No. 188 /2025**

Deposition of PW4 Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade–I B.C., on date 19.01.2026 in accordance with provisions with the Act of 1969.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.தமிழ்செல்வம் | Father's Name | : | திரு.சின்னதம்பி |
| Village | : | | Taluk | : | |
| calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது களர்பதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்மனில் கண்டுள்ள ஆவணங்களை எடுத்துவந்துள்ளேன் . நான் கிராம நிர்வாக அலுவலராக ஏழு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த நான்கு மாதங்களாக களர்பதி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கென்டிகாம்பட்டி கிராம சர்வே எண். 383/1 பி1 ஆனது மூன்று உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது , அதேபோல் சர்வே எண். 384/1 ஏ ஆனது எட்டு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது . 2019 வருடம் மாது என்பவருக்கு ரகுபதி கென்டிகாம்பட்டி சர்வே எண். 383 மற்றும் 384 சர்வே எண்களில் 20 1/2 சென்ட் நிலம் விற்பனை செய்துள்ள விவரம் எங்கள் பதிவேடுகளில் விவரங்கள் உள்ளது. மேற்படி சர்வே எண்.383 மற்றும் 384 ல் மாது என்பவர் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் தோராயமாக 20 சென்ட் நிலத்தில் அவர் சுவாதீனத்தில் இருந்து வருகிறார், சொத்தை அளந்தால் தான் உண்மையான சொத்தின் சுவாதீன அளவு தெரியவரும்.

சர்வே எண். 383 மற்றும் 384 ல் வாதிக்கு விற்பனை செய்த நிலம் போக ரகுபதிக்கு அதே சொத்தில் எவ்வளவு நிலம் உள்ளது என்று

சொன்னால் அவர் நிறைய நிலங்களை விற்றுள்ளார் , ஒவ்வொரு Sub–Division னையும் அளந்தால் தான் அவருக்கு மீதம் எவ்வளவு நிலம் உள்ளது என்பது தெரியும். 2019 ல் மாதுக்கு விற்பனை செய்தபிறகு ரகுபதி வேறு நபர்களுக்கும் அதே சர்வே எண்களில் வேறு சொத்துக்களை விற்றுள்ளார் . ரகுபதி அதே சர்வே எண்களில் வேறு சொத்துக்களை விற்றதால்தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண். 383 மற்றும் 384 ல் மாது சுவாதீனத்தில் உள்ளார் ஆனால் எவ்வளவு குறிப்பிட்ட அளவில் சுவாதீனத்தில் உள்ளார் என்று சொத்தை அளந்து பார்த்தால் தான் சொல்ல முடியும். சர்வே எண். 383 /1 பி1 , சர்வே எண்.383/1 பி1 பி, சர்வே எண். 383/1 பி1 சி, சர்வே எண். 384/1 ஏ 3 க்கான சிட்டா **Ex.A.13** ஆகும். சர்வே எண் 384 க்கான புல வரைப்படம் **EX.A.14** ஆகும். சர்வே எண் .383 க்கான புல வரைப்படம் **EX.A.15** ஆகும்.

**<u>மறுவிசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.01.20 10:09:36 +0530